மகிளா நீதிமன்றம், கடலூர்

**SC - 8/2021**

**அரசுதரப்பு சாட்சி 8 ஆவது சாட்சியின் வாக்குமூலம்.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் :<br>திரு / திருமதி/ செல்வி | திரு. கிஷோர் குமார் | வயது | |
| தந்தை / கணவர் பெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | 11.20 AM |
| தாலூக்கா | | தேதி | 16.04.2025. |
| மாவட்டம் | | | |

**சட்டம் 44/1969-ன் விதிமுறைகளின்படி சாட்சிக்கு 16.04.2025 -ம் நாளாகிய இன்று சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் முதன்மை விசாரணை:-**

நான் தற்போது ராஜா முத்தையா மருத்துவமனையில் அவசர சிகிச்சை மருத்துவ அதிகாரியாக பணியில் இருந்தபோது கடந்த 2019 ஆம் வருடம் செம்படம்பர் மாதம் மாலை 6.30 மணியளவில் சிதம்பரம் அண்ணாமலை பல்கலைகழகத்தில் தாமரை விடுதியில் தங்கியிருந்த திருவிடைமருதூர் தாலுக்கா, கதிராமங்கலம் போஸ்ட், நரிவேலி கிராமம் ஆதிதிராவிடர் தெருவை சேர்ந்த சுசிலா என்பவர் 19 வயதுடைய பெண் சுப்பிரமணி என்கிற பேராசிரியரால் அவசர சிகிச்சை பிரிவிற்கு அழைத்து வரப்பட்டார். அவரை பரிசோதனை செய்த போது 2019 செப்டம்பர் மாதம் 9 ஆம் தேதி மாலை 6.20 மணியளவில் அண்ணாமலை பல்கலைகழகம் விருந்தினர் மாளிகை அருகே அடையாளம்

தெரிந்த ஒரு நபரால் தன் மீது கழிவறை சுத்தம் செய்யும் அமிலத்தினால் தாக்கப்பட்டதாக தெரிவித்தார். மேலும், அவரை பரிசோதனை செய்த போது அவர் சுயநினைவுடனும், புத்தி சுவாதீனத்துடனும் இருந்தார். காயங்களின் விவரங்கள் - 1) அமிலத்தினால் ஏற்படும் அழர்ச்சி புண் காயத்தின் அளவு 2x2 CM அளவில் காணப்பட்டது. 2) எரிச்சல் மற்றும் மேலோட்டமான அழர்ச்சி புண் மேற்புற மார்பகத்திலும், பின்புறத்திலும் காணப்பட்டது. 3) இடது கண்ணில் அமிலத்தினால் ஏற்பட்ட சிதைந்த படலம் படிந்திருந்தது. நோயாளிக்கு அறுவை சிகிச்சை மருத்துவர், கண் மருத்துவர், காது மற்றும் தொண்டை மருத்துவரின் ஆலோசனைகள் பெறப்பட்டது. கண் மருத்துவரின் ஆ லோசனை படி அவரது இடது கண்ணில் கண் விழித்திரை சிதைந்தும், கண்ணீர் குழாயில் நீர் வீக்கமும் காணப்பட்டது. எனவே மேற்படி குறிப்பிட்ட காயத்தின் அடிப்படையில் அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று நான் சான்று வழங்கினேன். காயச்சான்று அ.த.சா.ஆ.6 ஆகும். மேற்சொன்ன காயங்கள் கழிவறைக்கு பயன்படுத்தும் அமிலத்தினால் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் உள்ளது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -** மருத்துவமனையில் இருந்து காவல் துறைக்கு தெரியபடுத்தினேனா என்றால் மருத்துவமனையில் இருந்த புற காவல் நிலையத்திற்கு தெரியப்படுத்தினோம். குறிப்பாக யாருக்கு தெரிவிக்கப்பட்டது என்று தெரியவில்லை. விபத்து பதிவேட்டில் MNC number என்று உள்ளது போலிசாருக்கு தகவல்

தெரிவிக்கப்பட்ட எண் ஆகும். காயம்பட்ட நபரை அழைத்து வந்ததாக சொல்லும் சுப்ரமணி புரபசர் என்று குறிப்பிடப்பட்டுள்ளவரை எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. அந்த பெண்ணுடன் வேறு யார் வந்தார்கள் என்றால் அவர் மட்டும் தான் வந்தார். வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் என்னை எந்த தேதியில் விசாரணை செய்தார் என்றால் தகவல் தெரிவிக்கப்பட்டு விபத்து பதிவேடு பதிவு செய்யப்பட்ட அன்றே 1 மணி நேரத்தில் என்னை விசாரித்தனர். கழிவறைக்கு பயன்படுத்தும் ஆசிட் என்று எனக்கு யார் சொன்னது என்றால் பாதிக்கப்பட்ட பெண் கூறியதை பதிவு செய்தேன். அந்த பெண்ணின் History கேட்கும் போதே அந்த விவரத்தினை கேட்டு எழுதினேன். முதலில் முகத்தில் ஊற்றினார் என்றும் பிறகு உடலில் ஊற்றினார் என்று கூறியதால் தனியாக கேட்டு எழுதினேன். ஆசிட்டிற்கும் கழிவறை சுத்தம் செய்யும் திரவத்திற்கும் வித்தியாசம் உள்ளது என்றால் சரிதான். கழிவறை சுத்தம் செய்ய எந்த வித ஆசிட் பயன்படுத்துவார்கள் என்றால் தெரியாது. பாதிக்கப்பட்ட பெண்ணை கண் மருத்துவரிடம் அனுப்பினேனா என்றால் அனுப்பினார். அந்த மருத்துவர் பெயர் Sridevi என்பவர் பார்த்தார். அவர் கண்ணிற்கு எந்தவித சிகிச்சை கொடுத்தார் என்று எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது, Case sheet பார்த்து தெரிந்து கொண்டேன். ENT மருத்துவர் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. அவர் எந்த வித சிகிச்சை கொடுத்தார் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். விபத்து பதிவேட்டிற்கும், காயச்சான்றிற்கும் வேறுபாடு உள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கில் நானாக

காயச்சான்றிதழ் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான் ஆனால் கண் மருத்துவர் மற்றும் ENT மருத்துவரிடம் பெற்ற கருத்துரையின் அடிப்படையில் தான் நான் காயச்சான்று வழங்கினேன். இந்த வழக்கில் கண் மருத்துவர் மற்றும் ENT மருத்துவரிடம் ஆவணங்கள் எதாவது பெற்று ஆய்வாளர் என்னிடம் காண்பித்து விசாரணை செய்தாரா என்றால் இல்லை. 09.09.2019 அன்றே என்னிடம் இருந்த அ.த.சா.ஆ.6 ஆவணத்தினை காவல் ஆய்வாளர் பெற்றுக்கொண்டார் என்றால் சரிதான். கண் மருத்துவர் மற்றும் ENT மருத்துவரிடம் பெற்ற ஆவணங்களை ஆய்வாளரிடம் ஒப்படைத்தோமா என்றால் இல்லை. கண்ணில் ஏற்பட்ட காயமானது நிரந்தரமாக ஏற்பட கூடியது அல்லது தற்காலிகமானதா அல்லது பகுதியாக நிரந்தமானதாக ஏற்பட்டதா என்று என்னால் கூற முடியுமா என்றால் கண் மருத்துவரால் தான் கூற முடியும். எனவே, நான் பதிவு செய்த காயச்சான்றிதழுக்கு எந்த வித முகாந்திரமும் இல்லை என்றால் சரியல்ல. பாதிக்கப்பட்ட பெண்ணிற்கு இடது கண்ணில் நிரந்தரமாக பார்வை இருக்காதா என்றால் இல்லை பகுதியாக இருக்கும். கொடுங்காயம் என்று ஏன் குறிப்பிட்டுள்ளேன் என்றால் மீதி பாதி பார்வை நிரந்தரமாக இருக்காது என்பதால் அப்படி குறிப்பிட்டுள்ளேன். நான் சொல்வது தவறு என்றாலும் அந்த பெண்ணிற்கு முழுவதும் அல்லது பகுதியாக கண் பார்வை இல்லை என்பது குறித்து கண் மருத்துவர் தான் கருத்துரை வழங்க முடியும் என்றாலும் சரிதான். பாதிக்கப்பட்ட பெண்ணிற்கு கண் பார்வை நன்றாக தான் உள்ளது என்றாலும் கண் பார்வை பகுதியாக தான் உள்ளது என்று நான் கருத்து தெரிவித்து

இருப்பது தவறு என்றாலும் சரியல்ல. பாதிக்கப்பட்ட பெண் மருத்துவமனையில் 12 நாட்கள் சிசிச்சையில் இருந்தார். 12 நாட்கள் முழு பரிசோதனை முடிந்த பிறகு தான் இறுதி கருத்துரை வழங்க முடியும் என்றால் சரிதான் ஆகையால், பாதிக்கப்பட்ட பெண் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அன்றே கருத்து தெரிவித்து இருப்பது தவறு என்றால் சரிதான். பாதிக்கப்பட்ட பெண்ணின் மீது ஊற்றப்பட்டது ஆசிட் அல்ல என்றாலும் வெறும் தண்ணீர் மட்டும் தான் என்றால் சரியல்ல. பேராசிரியல் சுப்ரமணி என்பவர் பாதிக்கப்பட்ட பெண்ணுடன் மருத்துவமனைக்கு வரவில்லை மற்றும் அவர் அவர் பாதிக்கப்பட்ட பெண்ணை அன்று அழைத்து வரவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய கருத்துரை சட்டப்படி செல்லத்தக்க அல்ல என்றால் சரியல்ல. ஆய்வாளர் கேட்டு கொண்டதிற்கிணங்க தவறான இது போல் கருத்துரையை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.